# Bharathirajaa

E-2/G, Parsn Apartments.
Gemini Compound.
Chennai - 600 006.
Phone : 044-28225474
Fax : 044-28267128
E-mail :
bharathirajaa1@yahoo.com
manojkumarb_2004@yahoo.com

என் இனிய தமிழ் மக்களே.

கடந்த 40 ஆண்டுகளாக திரைத்துறையில் கதாசிரியராக, திரைக்கதையாசிரியராக, வசனகர்த்தாவாக, இயக்குனராக என பல பரிமாணங்களில் இருந்த என்னை 35 ஆண்டுகளுக்கு முன்னர் 'கல்லுக்குள் ஈரம்' திரைப்படத்தின் மூலம் எனது நண்பனுக்காக நடிகனாக அறிமுகமானேன். ஆனால் இன்று இளைய தலைமுறையினர் என் மீது கொண்டுள்ள அளவுகடந்த அன்பின் மிகுதியாலும், அவர்கள் என் மீது வைத்துள்ள மிகுந்த நம்பிக்கையின் அடிப்படையிலும் நல்ல கருத்தாழமிக்க கதாபாத்திரங்களில் நடித்துக்கொண்டிருக்கிறேன்.

இதில் மற்றுமொரு பரிமாணத்தில் என்னை வெளிப்படுத்தும் விதமாக "THE HUT FILMS" ஐ சேர்ந்த இயக்குனர்களான சங்கர் மற்றும் குணா ஆகிய இருவரும் என்னை விளம்பர ஊடகத்திற்கு அழைத்து வந்தனர். தற்பொழுது ஒளிபரப்பாகிக்கொண்டிருக்கும் "MINISTER WHITE" வேட்டி, சட்டைக்கான விளம்பர படத்தில் சங்கர் மற்றும் குணா என் நடிப்பாற்றலை அற்புதமாக வெளிக்கொணர்ந்த தோடில்லாமல், தெளிவான Concept, நேர்த்தியான Filmmaking, எளிமையான Dialogues, மிகத்துல்லியமான Cinematography, வெண்மையை வெளிக்கொணரும் Art Design, கண்களை உறுத்தாத Editing என அனைத்துத் தொழில்நுட்பங்களையும், தொழில்நுட்ப கலைஞர்களையும் மிகச்சிறப்பாக கையாண்டுள்ளனர் என்று சொன்னால் மிகையாகாது

"THE HUT FILMS" என்ற விளம்பர நிறுவனமும் அதைச்சேர்ந்த இயக்குனர்களான சங்கர் மற்றும் குணா ஆகிய இருவரும் இத்துறையில் மென்மேலும் உயர்ந்து பல பரிமாணங்களைக்காண உளமாற வாழ்த்துகிறேன்.

அன்புடன்